பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் 5.50 இலட்சம் மெட்ரிக் டன் மரபுக்கழிவுகளை

ரூ. 53.60 கோடி மதிப்பீட்டில் பயோ - மைனிங் முறையில் அகற்றும் பணி!

அமைச்சர் கே.என். நேரு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்!

சென்னை,மார்ச்.5-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு , நேற்று (04.03.2026) பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் 5.50 இலட்சம் மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளை ரூபாய் 53.60 கோடி மதிப்பீட்டில் பயோ மைனிங் முறையில் அகற்றும் பணியினை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் பயோ மைனிங் முறையில் அகற்றப்படவுள்ள திடக்கழிவுகளுக்கான திட்ட வரைபடத்தினைப் பார்வையிட்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

பெருங்குடி குப்பைக் கிடங்கில் கடந்த 40 ஆண்டுகளாக, 2011ஆம் ஆண்டுக்கு முன்பு வரை பெருநகர சென்னை மாநகராட்சியும் மற்றும் அதை சுற்றியுள்ள பிற நகராட்சிகளும் உருவாக்கிய திடக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன. 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆலந்தூர், வளசரவாக்கம், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகள் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது மண்டலம் 9 முதல் 15 வரை உருவாகும் திடக்கழிவுகள் மட்டுமே பெருங்குடி குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டு வருகின்றன.

பெருங்குடி குப்பைக் கிடங்கில் உள்ள 225 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப்பரப்பில், 6 சிப்பங்களாக (Packages) பிரிக்கப்பட்டு, தூய்மை இந்தியா 1.0 திட்ட நிதியின் கீழ் ரூ.350.065 கோடி மதிப்பில், தரைமட்டத்திற்கு மேலாக குவிக்கப்பட்டிருந்த சுமார் 29.28 இலட்சம் கனமீட்டர் மரபுவழி (Legacy) கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த பயோ மைனிங் முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

28.02.2026 நிலவரப்படி, மொத்தம் 29.28 இலட்சம் கனமீட்டர் மரபுக் கழிவுகளில் இருந்து 29.20 இலட்சம் கனமீட்டர் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. மொத்தம் உள்ள 6 சிப்பங்களில், சிப்பம் 3, 4 மற்றும் 5 ஆகியவற்றில் பணிகள் முழுமையாக நிறைவு பெற்று 94 ஏக்கர் நிலப்பரப்பு மீட்டெடுக்கப்பட்டுள்ளது. சிப்பம் 6இல் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2026 இறுதிக்குள் சிப்பம் 6இல் பணிகள் முழுமையாக நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிப்பம் 1 மற்றும் 2இல் SBM 1.0 திட்டத்தின் கீழ் பணிகள் நிறைவடைந்திருந்தாலும், ஜூன் 2025 மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் ஆய்வின் அடிப்படையில், இப்பகுதிகளில் இன்னும் மீதமுள்ள 5.50 இலட்சம் மெட்ரிக் டன் மரபுக்கழிவுகளை தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் பயோ மைனிங் முறையில் அகற்ற தீர்மானிக்கப்பட்டது. இதற்காக ரூ.53.60 கோடி மதிப்பீட்டில் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தக் அறிக்கை வெளியிடப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி குறைந்த விலைப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு ரூ.51.26 கோடி மதிப்பில் பயோ மைனிங் பணிகளை மேற்கொள்ள 25.02.2026 அன்று பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான மொத்த காலவரையறை, ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து 9 மாதங்களாகும்.

மேற்கண்ட 5.50 லட்சம் மெட்ரிக் டன் மரபுக்கழிவுகள் முழுமையாக அகற்றப்பட்டபின், சிப்பம் 1 மற்றும் 2 பகுதிகளில் சுமார் 78 ஏக்கர் நிலப்பரப்பு கூடுதலாக மீட்டெடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி, மேற்கொள்ளப்படும் இப்பணி, பெருங்குடி குப்பைக் கிடங்கின் முழுமையான மறுசீரமைப்பில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலவளமீட்பு மற்றும் நகர வளர்ச்சி ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உருவாக்கும் முக்கிய முயற்சியாக இது அமையும் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ் குமார் மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், நிலைக் குழுத் தலைவர்கள் டாக்டர் கோ.சாந்தகுமாரி (சுகாதாரம்), பாலவாக்கம் த. விஸ்வநாதன் (கல்வி) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் மனிதநேயம் 29 கரு சுமந்த பெண்மைக்கு நலம் செய்வோம் ! கதிரவன் வெற்றியால் வளம் செய்வோம்! எனும் தலைப்பில் நேற்று அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் வட்ட கழக செயலாளர் பா.கதிரவன் தலைமையில் திரைக்கலைஞர். பூர்ணிமா பாக்கியராஜ், பட்டிமன்ற பேச்சாளர் கவிஞர்.அனுக்கிரகா ஆகியோர் 177 கர்ப்பிணி பெண்களுக்கு உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

‘ஒருங்கிணைந்த நில ஆவணம்’ –

பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை - இணையவழி சேவை!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் தொடங்கி வைத்தார்!

சென்னை. மார்ச். 5-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கிவரும் நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையால் இணையவழி ஆவணங்களான ‘அ’ - பதிவேடு . சிட்டா மற்றும் புலப்படம் ஆகியவை இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களின் விவரங்களை ஒருங்கிணைத்து. நில உரிமைதாரர்களுக்கு ‘ஒருங்கிணைந்த நில ஆவணம்’ (Integrated Land Record) என்ற சேவையையும். இணையவழியில் ஒரு புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ‘பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை’ (History of Patta Transfer) என்ற சேவையையும் நேற்று (04.03.2026) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் சென்னை. சேப்பாக்கம் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகத்தில் தொடங்கி வைத்தார்.

இச்சேவைகளின் விவரம் பின்வருமாறு:-

ஒருங்கிணைந்த நில ஆவணம் (Integrated Land Record) :

நில உரிமையாளர்கள் தங்களது நிலம் தொடர்பான ஆவணங்களை வங்கிகள் மற்றும் இதர அலுவலகங்களில் சமர்பிக்கும் பொருட்டு. https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் அவற்றை தனித்தனியாக பதிவிறக்கம் செய்து வழங்கும் நிலை இருந்து வந்தது. இந்நிலையில் இந்த மூன்று ஆவணங்களையும் ஒருங்கிணைத்து ஒரே ஆவணமாக வழங்கும் பொருட்டு. கடந்த 2021 - 2022 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி நில உரிமைதாரர்களுக்கு ஒருங்கிணைந்த நில ஆவணம் என்ற புதிய ஆவணம் வழங்கிட G.O.(Ms.) No. 613 Revenue and Disaster Management Department நாள்: 01.10.2021 அரசாணை வெளியிடப்பட்டு. தேசிய தகவலியல் மையத்தால் இந்த ஆவணம் வடிவமைக்கப்பட்டு. பொது மக்களின் பயன்பாட்டிற்கு இன்று துவக்கி வைக்கப்படுகிறது. நில உரிமைதாரர்கள் தங்களது நிலம் சார்ந்த மாவட்டம். வட்டம். கிராமம். புல எண். உட்பிரிவு எண் ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் பார்வையிட்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை (History of Patta Transfer) :

நில ஆவணங்கள் அனைத்தும் தமிழ்நிலம் மென்பொருள் மூலமாக கணினிபடுத்தப்பட்டு. 2014-ம் ஆண்டு முதல் 2016-ம் ஆண்டு வரையில் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலமாகவே நிலம் தொடர்பான பட்டா மாறுதல் இணையவழியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு ஆவணம் உருவாக்க முடிவு செய்யப்பட்டு. கடந்த 2024 - 2025 ஆண்டு கூட்டத்தொடரில் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி. ‘பதிவுத்துறையில் வழங்கப்படும் வில்லங்கச் சான்றிதழில். பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள் குறிப்பிடுவது போல. 2016-ம் ஆண்டு முதல் குறிப்பிட்ட கால வரையரைக்குள் தனியார் நிலங்கள் தொடர்பாக நில ஆவணங்களில் இணைய வழியில் மேற்கொள்ளப்பட்ட பட்டா மாற்றங்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையினை பொது மக்களுக்கு இணையம் வழியே ஆவணமாக வழங்கும் பொருட்டு அரசால் G.O.(Ms). No. 309 Revenue and Disaster Management [Survey and Settlement II(2)] Department. dated: 16.08.2024 மற்றும் G.O (Ms). No. 415 Revenue and Disaster Management Department [Survey and Settlement II(2)] Department] Dated: 14.10.2024 ஆகிய அரசாணைகள் வெளியிடப்பட்டு. தேசிய தகவல் மையம் மூலமாக இந்த ஆவணம் வடிவமைக்கப்பட்டு. பொது மக்களின் பயன்பாட்டிற்கு இந்சேவை துவக்கி வைக்கப்படுகிறது.

நில உரிமையாளர்கள் https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் https://tamilnilam.tn.gov.in/citizen என்ற தலைப்பினை தேர்வு செய்து தங்களது நிலம் சார்ந்த விவரங்களான மாவட்டம். வட்டம். கிராமம். புல எண். உட்பிரிவு எண் மற்றும் விவரம் தேவைப்படும் தேதியினை தேர்வு செய்ய வேண்டும். பின்னர். பட்டா மாற்ற விவரக் கட்டணமான ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50/- வீதம் மற்றும் செயலாக்க கட்டணமாக ரூ. 60/- ஆகியவற்றை இணையம் வாயிலாக இத்தொகையினை செலுத்தி விண்ணப்பம் செய்தவுடன். ‘முந்தைய பட்டா மாறுதல் விவர அறிக்கை’ நில உரிமைதாரரின் ‘Citizen Portal’ கணக்கில் பதிவிறக்கம் செய்யப்பட்டு இருக்கும். இதனை நில உரிமையாளர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்சியில் நடைபெறும்

கழக மாநில மாநாட்டில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு !

மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

திருவள்ளூர் மார்ச் 05:

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் திருவள்ளூரில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் அப்போது பேசிய அவர்

தந்தை தெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் உருவமாக நம் முன் இருப்பவர் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மார்ச் 9ஆம் தேதி அன்று திருச்சியில் நடைபெறும் கழக மாநிலம் மாநாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் உள்ள கழக நிர்வாகிகளை திரட்டி 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெருந்திரளாக பங்கேற்று திருவள்ளூர் மேற்கு கழகத்திற்கு பெருமை சேர்த்திட வகையில் கலந்து கொள்ள வேண்டும்

திராவிட மாடல் ஆட்சியில் செய்த சாதனைகள் மற்றும் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்கள் தோறும், நகரங்கள் தோறும், பகுதி பேரூர் தோறும் வட்டங்கள், வார்டுகள், கிளைகள், குக்கிராமங்கள் வரையில் கொண்டு சென்று மக்களிடம் சேர்த்து தி.மு.கழகத்தை ஏழாவது முறையாக அரியணை ஏற்றிடவும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் என்று கூறி இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுபேற்கவும் நாம் உறுதிமொழி ஏற்று தேர்தல் களப் பணியில் அனைவரும் ஈடுபடு வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்

தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் சேகர், சண்முகநாதன், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஆர். டி. இ. ஆதிசேஷன். ஓ.ஏ.நாகலிங்கம், சி.ஜெயபாரதி ப.சிட்டிபாபு. ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், கூளூர். எம். ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ. ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், தா.மோதிலால், ஏ.பிரகாஷ் ஞான ஒலி, வி.வினோத் குமார், ஆர்த்தி ரவி, சி. ஜெ.சீனிவாசன், சி.என்.சண்முகம், பெ.பழனி, கே.ராஜேந்திரன், பிடி.சந்திரன், பா.சம்பத், மா.ரகு, டி.ஆர்.கே.பாபு மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் .

வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைக்கிறார்!

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் அறிக்கை!

திருவள்ளூர். மார்ச். 05

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி தொகுதிகளில் கலைஞர் நூலகங்களை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தலைமையில் இவ்விரு தொகுதிகளில் நடைபெறுகிறது. பொன்னேரி தொகுதியில் மீஞ்சூர் பேரூர். மீஞ்சூர் பேரூராட்சியில் நாளை (06.03.2026 வெள்ளிகிழமை) மாலை 4.00 மணி அளவிலும். கும்மிடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் வடக்கு ஒன்றியம். பெரியபாளையம் பஜார் வீதியில் காவல் நிலையம் அருகில் நாளை (06.03.2026 வெள்ளிகிழமை) மாலை 5.00 மணி அளவில் நூலகங்கள் திறப்பு விழா நடைபெறயுள்ளது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விரு நிகழ்ச்சிகளில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று நூலகங்களை திறந்து வைக்கிறார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர். கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி. ஜெ.கோவிந்தராஜன். தலைமை செயற்குழு உறுப்பினர். எல்லாபுரம் ஒன்றியச் செயலாளர் பி.ஜெ.மூர்த்தி. மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் பா.அப்துல்மாலிக். க.பிரபு கஜேந்திரன். ஜி.பி.ராஜா. மீஞ்சூர் பேரூர் செயலாளர் கா.சு.தமிழ் உதயன் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்ச்சியில் மு.பகலவன். இ.ஏ.பி.சிவாஜி. சி.எச்.சேகர். சுரேஷ் செல்வராஜ். வீ.கவிகணேசன். கே.ஜி.பாஸ்கர்சுந்தரம். வெ.அன்பு வாணன். ஜி.ஸ்டாலின். ஏ.கே. சுரேஷ். ஜி.ராபர்ட்ராஜதுரை. கே.விஜி. உமாமகேஸ்வரி. மு.கதிரவன். எம்.எல்.ரவி. எஸ்.ரமேஷ். ஏ.வி.ராமமூர்த்தி. கே.சுப்பிரமணி. பி.வெங்கடாசலவதி. பா.செ.குணசேகரன். டாக்டர் பரிமளம் விஸ்வநாதன். ஒன்றிய. பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன். ஆ.சத்தியவேல். டி.கே.சந்திரசேகர். கி. வேணுஆனந்த். மு.ஜான் (எ)பொன்னுசாமி. ந.பரிமளம். நா.செல்வசேகரன். கா.சு.ஜெகதீசன். ஏ.ஆர்.டி.உதயசூரியன். மு.முரளிதரன். ஆ.ராஜா. வே.ஆனந்தகுமார். ஜி.ரவிகுமார். இரா.அறிவழகன். அபிராமி குமரவேல். பி.முத்து பங்கேற்கின்றனர்.

பேரூராட்சி மன்ற தலைவர்கள் ருக்குமணி மோகன்ராஜ். அப்துல் ரஷீத் . ஷகிலா அறிவழகன். துணைத் தலைவர்கள் குமரவேல் . அலெக்சாண்டர். கேசவன். ஒன்றிய. நகர. பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் க.மில்லர். ஜ.ராஜா. ஜெ.வீர.மணிகண்டன். ஆ.சந்திரமோகன். ப.சுரேஷ். எ.ராஜ்குமார். ப.தமிழரசன். சி.இராமாராவ். ர.குமரேசன். க.ராஜேஷ். எம். எல்.சிலம்பரசன். ச.எழிலரசன். மா.தீபன். வ.சாணடில்யன். மு. ரஹீம். ஜி.ஆர்.பார்த்திபன் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்கின்றனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ. மோகன்பாபு. டி.சங்கர். செ.யுவராஜ். இரா.கதிரவன். ஜெ.பிரதாப். தில்லைகுமார் நன்றியுரை கூறுகின்றனர்.

மகளிரின் பெரும் ஆதரவோடு

1 கோடி குடும்பங்களைக் கடந்த ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ வீடு வீடாக பரப்புரை

சென்னை,மார்ச்.5–

தலைவர் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிக்களிலும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் – வீடு வீடான பரப்புரையானது ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்களால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

திராவிட மடல் அரசு பெண்களுக்காக செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களும் அதனால் அவர்களது குடும்பங்கள் எவ்வாறு எல்லாம் பயனடைந்து வருகின்றன என்ற தகவலையும் ஒவ்வொரு மகளிரிடமும் விளக்கமாக எடுத்துக் கூறி ஆதரவு திரட்டி வருகின்றனர் ஸ்டாலினின் மகளிர் படையினர்.

75,031 வாக்குச்சாவடிகளிலும் முழு மூச்சாக நடைபெற்று வரும் பரப்புரையில் இதுவரை 1,29,96,047 வீடுகளுக்கு நேரில் சென்று பிரச்சாரம் செய்துள்ளனர் ஸ்டாலினின் மகளிர் படையினர். வரும் மார்ச் 8 க்குள் 2,00,00,000 இல்லங்களுக்கு நேரில் சென்று கழகத்திற்கான ஆதரவு திரட்டிமுடிக்க உள்ளனர்.

ஒவ்வொரு வீட்டிலும் மிகுந்த உற்சாகத்தோடும் , பாசத்தோடும் வரவேற்று உபசரிக்கும் பெண்கள், ”முதலமைச்சர் ஸ்டாலின் எங்கள் அண்ணன் அவர்தான் மீண்டும் முதலமைச்சார் ஆவார் – உரிமையோடு ஆதரவளித்து வருகின்றனர்.

இப்பரப்புரையின் போது ஒன்றிய பாஜக அரசு தடுக்க முயன்ற போதும் மகளிர்களுக்கு தடையில்லாமல் உரிமை தொகை கிடைக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் 1.31 கோடி மகளிர்க்கு முன் கூட்டியே கொடுத்த ரூ.5000, தற்போது விளிம்பு நிலை மக்களான முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் என சுமார் 40 லட்சம் பேருக்கு கொடுத்துள்ள ரூ.2000 சிறப்பு நிதி ஆகியவை மக்கள் முன் எடுத்துரைக்கப்பட்டது. அதோடு முதியோர் உதவி தொகை ரூ.1000 லிருந்து ரூ.1200 ஆக உயர்வு, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே வரும் ரேஷன் பொருட்கள், முதியோர் பகல் நேர காப்பகம் அன்புச்சோலை, தாய் தந்தை இழந்த குழந்தைகளை பாதுகாக்கும் அன்புக்கரங்கள் திட்டம் என திராவிட மாடல் அரசின் எண்ணற்ற நலத்திட்டங்களையும் அதனால் ஏற்பட்ட நன்மையையும் விளக்கி மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய ஆதரவு திரட்டப்பட்டது.